# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 111/மா/2025**

**நாள்: 24.07.2026**

M. சக்தி,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–10,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 033, மேற்கு மாம்பலம், ஆண்டியப்பன் தெரு, கதவு எண் 83 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M. சக்தி என்பவரின் 04.02.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.02.2025 அன்று பெறப்பட்டு 111/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 033, மேற்கு மாம்பலம், ஆண்டியப்பன் தெரு, கதவு எண் 83 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M. சக்தி என்பவர் தனது 04.02.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் எங்களுக்கு சொந்தமான தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வீட்டில் குடும்பமாக 450 சதுர அடியில் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் வசிக்கும் தெரு சுமார் 8 அடி தெருவாகும். எங்கள் வீட்டு எதிர்புறம் வசிக்கும் திரு எத்திராஜ் H/O ராணி அவர்களுக்கு சொந்தமான பழைய வீட்டை இடித்து சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக கட்டுமான வேலைகள் செய்து வருகிறார்கள். மாநகராட்சிக்கு சொந்தமான 8 அடி கான்கிரீட் சாலையை உடைத்து சுமார் 5 அடி அகலம், 15 அடி நீளத்தில் இரும்பு ராடுகளால் தூண்கள் அமைத்து மேல்பகுதியில் ரூப் அமைத்து அதற்கு மேல் தெருவை முழுமையாக ஆக்கிரமித்து பால்கனி அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இதனால் எங்கள் வீடு முழுமையாக இருளடைந்து காற்று இல்லாமல் மூச்சுத் திணறல் ஏற்பட்டு வருகிறது. மேலும் ஒரு இருசக்கர வாகனம் கூட உள்ளே சென்று திரும்பி வர இயலாத நிலை உள்ளது. அதிக புயல் காற்று பூமி அதிர்வு ஏற்பட்டால் ஆக்கிரமித்து கட்டப்படும் வீடு எங்கள் வீட்டின் மேல் சாய்ந்து உயிர் சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. இது சம்மந்தமாக கடந்த 21.7.2024 அன்று R 6 குமரன் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்து CSR வழங்கியதை இம்மனுவுடன் இணைத்துள்ளேன். காவல் துறையினர் எதிரிகளை இதுபோல் ஆக்கிரமித்து கட்டக்கூடாது என்று பலமுறை எச்சரித்தும் இரவு நேரங்களில் கட்டுமான வேலைகளை செய்து வருவதால் மாநகராட்சி கட்டுப்பாட்டு அறை 1913 எண்ணிற்கு 24.7.2024 அன்று புகார் அளித்ததைச்

சான்றுடன் இணைத்துள்ளோம். ஆகவே ஐயா அவர்கள் போர்க்கால அடிப்படையில் கட்டுமான வேலையை நிறுத்த உத்தரவிட்டு ஆக்கிரமிப்புகளை புகைப்பட வீடியோ ஆதாரங்களுடன் அகற்றி பதிலளிக்க இம்மனு சமர்ப்பிக்கப்படுகிறது.''

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 24.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளர் தனது 21.05.2026 நாளிட்ட கடிதம் ம.அ.10/ந.க.எண்.அ3/4336/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"M. சக்தி அவர்கள் எண் 83, ஆண்டியப்பன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் வசிப்பதாகவும், தனது எதிர்வீட்டில் வசிக்கும் திரு. எத்திராஜ் அவர்கள் வீட்டை இடித்து விட்டு சாலையை ஆக்கிரமித்து வீடு கட்டுவதாகவும் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தெரிவிப்பதுயாதெனில், M. சக்தி அவர்களால் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட இடம் ஆய்வு செய்யப்பட்ட போது, இக்கட்டிடம் கட்டப்பட்டு வரும் இடம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடமாகும். கட்டிட உரிமையாளர் திரு. எத்திராஜ் அவர்களுக்கு 16.92 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடம் பிளாட் எண் 137 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் கட்டிட உரிமையாளர் கட்டடப் பணிகளை மேற்கொள்ளும்போது பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் களஆய்வு செய்து கட்டட வரைபட நகலை அளிக்க கோரி 06.08.2024 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது. குறித்த காலகெடுவிற்குள் கட்டட உரிமையாளர் வரைபட நகலினை சமர்ப்பிக்காததால் 05.05.2025 நாளிட்ட தாக்கீது II வழங்கப்பட்டது.

M. சக்தி அவர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் W.P. No.8774 of 2025–ன்படி வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், 02.07.2025 அன்று ஆணையிடப்பட்டது. அதன் விபரம்

> Inview of the submission made by the learned Standing Counsel and the Additional Government Pleader and also taking note of the status report, we are inclined to direct the 4th respondent to identify the exact area encroached in the property of the petitioner as well as the 8th respondent. The said exercises shall be completed by the 4th respondent within a period of two weeks from the date of receipt of copy of the order. Once such exercise is completed, the 2nd respondent shall take enforcement action by affording an opportunity of personal hearing to the petitioner and the 8th respondent and pass orders in accordance with law, within a period of 8 weeks thereafter. 02.07.2025 அன்று ஆணையிடப்பட்டது.

மாம்பலம் வட்டாட்சியர் அவர்களின் 09/10/2025 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட புலம் தொடர்பாக வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்தததில் வகைபாடு சர்கார் புறம்போக்கு, அடங்கல் கலத்தில் நல்லான்குப்பம் காசிகுளம், நில உபயோகம் குளம் என பதிவாகியுள்ளது. மேலும் இவ்வட்ட அலுவலக பிளாக் வரைபடத்தில் மேற்கண்ட நகர புல எண் 11 ஆனது முழு புலமாக எவ்வித உட்பிரிவுகளுமின்றி பதிவாகியுள்ளது. எனவே நிலஅளவீடு மேற்கொள்ள இயலவில்லை என தெரிவிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு உயர்நீதி மன்ற (வழக்கு எண் W.P. No.8774 of 2025) ஆணையின்படி கட்டிட உரிமையாளர் திரு. எத்திராஜ் அவர்களை பிப்ரவரி மாதம் 2026 அன்று செயற்பொறியாளர், மண்டலம் 10 அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையின்போது திரு. எத்திராஜ் அவர்கள் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தனக்கு இவ்விடத்தை பிளாட் எண் 137, 16.92 சதுரமீட்டர் பரப்பளவில் உள்ள இடத்தை ஒதுக்கீடு செய்ததாகவும், அவ்விடத்திலேயே வீடு கட்டியுள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் அவர் அளித்த ஒதுக்கீடு வரைபட நகலில் சாலை பகுதியில் சுமார் 1.74 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை ஆக்கிரமித்துள்ளார் என தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தரைதளத்தில் சாலையை ஆக்கிரமித்து கட்டியிருந்த இடத்தினை அகற்ற அறிவுறுத்தியதன் அடிப்படையில் கட்டிட உரிமையாளரால் அகற்றப்பட்டது. ஆனால் 1வது, 2வது, 3வது தளங்கல் பால்கனியாக உள்ளது. மேலும் கட்டிட உரிமையாளர் திரு. எத்திராஜ் அவர்கள் M. சக்தி அவர்கள் சாலையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதாக புகார் அளித்துள்ளார். இப்புகாரின் அடிப்படையில் M. சக்தி அவர்களுக்கு 20.05.2026 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களது மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

5. மனுதாரர் 22.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டபோது அங்கு கட்டப்பட்டுவரும் கட்டிடத்தின் இடம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடமாகும். அக்கட்டிடத்தின் உரிமையாளர் திரு.எத்திராஜ் அவர்களுக்கு மேற்கண்ட வாரியம் பிளாட் எண்.137, 16.92 சதுர மீட்டர் பரப்பளவு ஒதுக்கீடு செய்துள்ளது. அவ்விடத்தில் வீடு கட்டியுள்ளார். ஆனால் அவர் அளித்த ஒதுக்கீடு வரைப்பட நகலில் சாலை பகுதியில் சுமார் 1.74 சதுர மீட்டர் பரப்பு உள்ள இடத்தினை ஆக்கிரமித்துள்ளதாக தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனை அகற்ற கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டப்படி அதனை அகற்றிவிட்டார். ஆனால் 1வது, 2வது, மற்றும் 3வது தளங்களில் பால்கனியாக உள்ளது. எனவே அதனை அகற்றினால் திரு.எத்திராஜ் குடும்பத்தினர் கீழே இறங்கி வர இயலாது என்பதால் அதனை அகற்றவில்லை என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் திரு.எம்.சக்தி அவர்களும் சாலையை ஆக்கிரமித்துள்ளதாக திரு எத்திராஜ் அவர்களும் மனு அளித்துள்ளதன் பேரில் மனுதாரர் திரு.எம்.சக்தி அவர்களுக்கும் 20.05.2026 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

6. மனுதாரர் தனக்கு உடம்பு சரியில்லாத காரணத்தால், 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணைக்கு கலந்து கொள்ள இயலவில்லை என்றும், மற்றொரு நாள் விசாரணை நடத்துமாறு மின்னஞ்சலில் கோரியதன் அடிப்படையில், மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 09.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு நகலிடப்பட்டது.

7. மனுதாரர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

"தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 450 சதுரடியில் உள்ள மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள வீட்டில் வசித்து வருகிறோம். நாங்கள் வசிக்கும் தெரு சுமார் 8 அடி தெருவாகும். எங்கள் வீட்டிற்கு எதிர்புறம் வசிக்கும் திரு எத்திராஜ் H/O ராணி அவர்களுக்கு சொந்தமான பழைய வீட்டை இடித்து மாநகராட்சிக்கு சொந்தமான 8 அடி கான்கிரீட் சாலையை உடைத்து சுமார் 5 அடி அகலம் 15 அடி நீளத்தில் இரும்பு ராடுகளால் தூண்கள் அமைத்து மேல்பகுதியில் ரூப் அமைத்து அதற்கு மேல் தெருவை முழுமையாக ஆக்கிரமித்து பால்கனி அமைத்துள்ளார்கள். இதனால் எங்கள் வீடு முழுமையாக இருளடைந்து காற்று இல்லாமல் மூச்சுத் திணறல் ஏற்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிசை மாற்று வாரியத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் Sale Deed வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் உதவி ஆணையர் அவர்களுக்கு புகார் அளித்து கட்டுமான வேலைகளை அதிகாரிகள் நிறுத்திய போதும் மீண்டும் 21.08.2024 முதல் கட்டுமான வேலைகள் செய்து வருவதை தொடர்ந்து, என்னால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் 8774/2025ல் வழங்கிய 02.07.2025 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி சாலை எத்தனை அடி அகலம், நீளம் ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்கள் என்று மாம்பலம் வட்டாட்சியர் அளவீடு செய்து அவ்வறிக்கையின் அடிப்படையில், உரிய நடவடிக்கை எடுக்குமாறு 22.08.2024 அன்று மனு அளித்துள்ளேன். மேலும், வட்டாட்சியர் அறிக்கை அளிக்கும் வரை கட்டிடப்பணியை நிறுத்த கோரி மனு அளித்தோம். மாம்பலம் வட்டாட்சியர் கடந்த வருடம் அக்டோபர் மாதம் அறிக்கை அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே மாம்பலம் வட்டாட்சியர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10—ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 25.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:—

''மனுதாரர் வசிக்கும் இடமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமாகும். அவ்விடமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமானதாகும்.

மனுதாரர் தனது புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.8774 of 2025 தொடர்ந்த வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 02.07.2025 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் சென்னை மாவட்டம் மாம்பலம் வட்டம் வட்டாட்சியர் அவர்கள் தனது அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில் வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு அடங்கல் கலத்தில் நல்லான் குப்பம் காசி குளம், நில உபயோகம் குளம் என பதிவாகி உள்ளது. மேலும் வட்டாட்சியர் அலுவலக பிளாக் வரைப்படத்தில் மேற்கண்ட நகர புல எண்.11 — ஆனது முழு புலமாக எவ்வித உட்பிரிவுகளுமின்றி பதிவாகியுள்ளது.

எனவே, மேற்கண்ட உயர்நீதி மன்ற ஆணையினை நிறைவேற்றும் வகையில் மனுதாரர் திருமதி. M.சக்தி மற்றும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புதாரர் ஆகியோர்களிடம் 2026 பிப்ரவரி மாதம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

9. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 450 சதுரடியில், சுமார் 8 அடி அகலம் கொண்ட தெருவில், கதவு எண் 83, ஆண்டியப்பன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் வசிப்பதாகவும், அவர் வீட்டிற்கு எதிர்புறம் வசிக்கும் திரு எத்திராஜ் என்பவருக்கு சொந்தமான பழைய வீட்டை இடித்து மாநகராட்சிக்கு சொந்தமான 8 அடி கான்கிரீட் சாலையை உடைத்து சுமார் 5 அடி அகலம் 15 அடி நீளத்தில் இரும்பு ராடுகளால் தூண்கள் அமைத்து மேல்பகுதியில் ரூப் அமைத்து அதற்கு மேல் தெருவை முழுமையாக ஆக்கிரமித்து பால்கனி அமைத்துள்ளதால், மனுதாரர் வீடு முழுமையாக இருளடைந்து காற்று இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள் என்பதும், மேற்கண்ட குடிசை மாற்று வாரியத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் Sale Deed வழங்கப்பட்டுள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் உதவி ஆணையருக்கு புகார் அளித்து அதன் அடிப்படையில், கட்டுமான வேலைகளை நிறுத்திய போதும், மீண்டும் கட்டுமான வேலைகளை தொடர்ந்ததால், மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி சாலை எத்தனை அடி அகலம், நீளம் ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்கள் என்று மாம்பலம் வட்டாட்சியர் அளவீடு செய்து அவ்வறிக்கையின் அடிப்படையில், உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனு அளிக்கப்பட்டது என்பதும், மாம்பலம் வட்டாட்சியர் கடந்த வருடம் அக்டோபர் மாதம் அறிக்கை அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால், அறிக்கையின் அடிப்படையில். மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள இடமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில், அவ்வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதும், மனுதாரர் வீட்டிற்கு எதிரே திரு. எத்திராஜ் என்பவர் தெருவினை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக மனுதாரரால், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.8774 of 2025–ல் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பின்படி, சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், வட்டாட்சியரால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு அடங்கல் கலத்தில் நல்லான் குப்பம் காசி குளம், நில உபயோகம் குளம் என பதிவாகி உள்ளது என்பதும், வட்டாட்சியர் அலுவலக பிளாக் வரைப்படத்தில் மேற்கண்ட நகர புல எண்.11 – ஆனது முழு புலமாக எவ்வித உட்பிரிவுகளுமின்றி பதிவாகியுள்ளது என்பதும், மேற்கண்ட மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணையினை நிறைவேற்றும் வகையில் மனுதாரர் திருமதி. M.சக்தி மற்றும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புதாரர் ஆகியோர்களிடம் 2026 பிப்ரவரி மாதம் நடைபெற்ற விசாரணையை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் உரிய தொடர் நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதும், பெருநகர மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் எண் 83, ஆண்டியப்பன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33 என்ற முகவரியில் வசிப்பதாகவும், தனது எதிர்வீட்டில் வசிக்கும் திரு. எத்திராஜ் என்பவர் வீட்டை இடித்து விட்டு மாநகராட்சிக்கு சொந்தமான சாலையை உடைத்து இரும்பு ராடுகளால் தூண்கள் அமைத்து மேல்பகுதியில் ரூப் அமைத்து அதற்கு மேல் தெருவை முழுமையாக ஆக்கிரமித்து பால்கனி அமைக்கப்பட்டு வரும் கட்டுமான வேலையை நிறுத்தி ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக, மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.8774 of 2025–ல் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பினை நிறைவேற்றும் வகையில் மனுதாரர் திருமதி. M.சக்தி மற்றும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புதாரர் ஆகியோர்களிடம் 2026 பிப்ரவரி மாதம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உரிய தொடர் நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது 02.07.2025 நாளிட்ட தீர்ப்பில் விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவினை கருத்திற்கொண்டு, உரிய சட்டபூர்வ நடவடிக்கையினை துரிதமாக மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி . M. சக்தி,
கதவு எண் 83 , ஆண்டியப்பன் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–600 033.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 117, N.S.K. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

27/7/26
செயலாளர்.

27/7/26